Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MAY 06, 2025

செவ்வாய்க்கிழமை 06, மே 2025 | ஒளி: 10 கதிர்: 232 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# வடக்கு தங்கம்: விசாரிக்க உத்தரவு

மனிதாபிமான நடவடிக்கையின் போது, இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தங்கப் பொருட்கள் அடங்கிய தங்கக் கையிருப்பு குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, இலங்கை மத்திய வங்கி, தேசிய நகை ஆணையம் மற்றும் பல அரசு நிறுவனங்களுக்குத் தொடர்ச்சியான உத்தரவுகளை, திங்கட்கிழமை (05) பிறப்பித்தார்.

தொடர்ச்சி P2

# மலரஞ்சலி...



வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஹனோயில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்திற்கு திங்கட்கிழமை (05) அன்று சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.
பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள ஹோ சி மின் நினைவிடத்தைப் பார்வையிட்ட ஜனாதிபதி, சுதந்திரப் போராட்டத் தலைவரும், சுதந்திர வியட்நாமின் முதல் ஜனாதிபதியுமான ஹோ சி மின் இன் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.
இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்து கொண்டார்.



## 339க்கு

# இன்று 'மை'

- 75,589 பேர் களத்தில்
- 8,287 பேர் தெரிவாகுவர்
- 17,256,338 பேர் வாக்களிக்க தகுதி
- 13,759 வாக்களிப்பு நிலையங்கள்
- 02 சபைகளுக்கு நடைபெறாது
- ஹப்புத்தளையில் குறைவு; கொழும்பில் அதிகம்


நாட்டில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில், 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு, இன்று (06) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை, வாக்களிப்பு இடம்பெறவுள்ளன. இதற்கான, சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில், 17,256,338 பேர் வாக்களிக்க தகுதிப்பெற்றுள்ளனர். 341 உள்ளூராட்சி மன்றங்களில் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பே இன்று நடைபெறுகின்றது. அதில், 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகள் அடங்குகின்றன.

இந்த தேர்தலின் ஊடாக, வட்டார ரீதியில், 5052 உறுப்பினர்களும் மேலதிக பட்டியலின் ஊடாக 3,235 பேருமாக மொத்தமாக 8,287 உறுப்பினர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக, 75,589 பேர் களத்தில் குதித்துள்ளனர்.

தொடர்ச்சி P2





ஐரோப்பிய ஒன்றிய

# இராஜதந்திரக் குழுவினர் சஜித்தை சந்தித்தனர்

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தலைமையிலான இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரக் குழுவினருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (05) இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ (H.E. Carmen Moreno), ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடெல்,

தொடர்ச்சி P2



# "அலட்சியம் வேண்டாம்"

கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் வழக்கமான வைரஸ் காய்ச்சல் அதிகரித்து வருவதால், இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல் இருந்தால் மருத்துவரை அணுகுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் ஆலோசகர் மருத்துவர் அச்சலா பாலசூரிய கூறியதாவது, சரியான மருத்துவ ஆலோசனை இல்லாமல் வீட்டிலேயே காய்ச்சலுக்கு சிகிச்சை அளிப்பது ஆபத்தானது.

தொடர்ச்சி P2

கண்காணிப்பாளர்களில்

# வெளிநாட்டினர் இல்லை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைக் கண்காணிக்க 4,450 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் செவ்வாய்க்கிழமை(06) பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த, நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் ( பப்வ்ரல்) நிர்வாக இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி, இந்தத் தேர்தலைக் கண்காணிக்கக் கிட்டத்தட்ட 3,000 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று கூறுகிறார்.

தொடர்ச்சி P2

# தெருநாய் இறைச்சி விற்பதாக சந்தேகம்



தெருநாய்களை பிடிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல், அந்த தெருநாய்களை இறைச்சியாக்கி விற்பனை செய்கின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதிக்கு அவதூறு: துசிதவுக்கு சிக்கல்

> சட்டத்தரணி அகலங்க உக்வத்தேவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவும் இதில் இணைந்து கொண்டார்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக அவதூறான மற்றும் தவறான கருத்துக்கள் தொடர்பாக, தேசிய லொத்தர் சபையின் முன்னாள் செயற்பாட்டுப் பணிப்பாளரும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகமுமான துசித ஹல்லொலுவவுக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை (04) இரவு மீது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "இலங்கையில் முதலீடு செய்ய வாருங்கள்"



வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, ஞாயிற்றுக்கிழமை (04) பிற்பகல் வியட்நாமில் உள்ள வின்குருப் (Vin Group) குழுமத்தின் உயர் நிர்வாகத்தைச் சந்தித்து கலந்துரையாடினார்.

வின்குருப் (Vin Group) குழும தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின், இலங்கையில் ஆதன வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடு செய்யுமாறு வின்குருப் குழுமத்திற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். வின்குருப் நிறுவனத்தின் வெற்றி மற்றும் பல்வகைப்பட்ட உலகளாவிய வர்த்தகநாமங்களின் உருவாக்கத்திற்கும் வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,இலங்கையில் முதலீட்டிற்கு நெகிழ்வான மற்றும் உகந்த சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளது என்று வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# "அலட்சியம் வேண்டாம்"

சிலர் இது ஒரு எளிய வைரஸ் காய்ச்சல் என்று நினைக்கலாம், ஆனால், டெங்கு அல்லது சிக்குன்குனியா போன்ற கடுமையான நோய்கள் இதேபோன்ற அறிகுறிகளுடன் தொடங்கலாம்.

இருப்பினும், ஆரம்பத்திலேயே பரிசோதனை செய்து கொள்வதும், நிலைமையை மோசமாக்கும் மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் முக்கியம்.

மருத்துவரை அணுகாமல் ஆஸ்பிரின் அல்லது ஐபுப்ரூஃபன் போன்ற மருந்துச் சீட்டு வலி நிவாரணிகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் அவர் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

இந்த மருந்துகள் அனைத்து வகையான காய்ச்சலுக்கும் பாதுகாப்பானதாக இருக்காது.

உங்களுக்கு இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல், குறிப்பாக சோர்வு, தோல் வெடிப்புகள் அல்லது மூட்டு வலி இருந்தால், முறையான பரிசோதனைக்காக மருத்துவமனை அல்லது மருத்துவமனைக்குச் செல்வது நல்லது.

மேலும், இந்த நாட்களில் சிக்குன்குனியா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

> **இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல், குறிப்பாக சோர்வு, தோல் வெடிப்புகள் அல்லது மூட்டு வலி இருந்தால், முறையான பரிசோதனைக்காக மருத்துவமனை அல்லது மருத்துவமனைக்குச் செல்வது நல்லது**

முக்கிய அறிகுறிகளில் திடீர் அதிக காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை அடங்கும். பெரும்பாலான நோயாளிகள் ஒரு வாரத்திற்குள் குணமடைந்தாலும், சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக வயதானவர்களிடையே, மூட்டு வலி மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும். எனவே, காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவ ஆலோசனையைப் பெறுவதன் முக்கியத்துவத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இதற்கிடையில், ஜனவரி முதல் இலங்கையில் 17,000 க்கும் மேற்பட்ட டெங்கு வழக்குகளும் 16,600 சிக்குன்குனியா வழக்குகளும் பதிவாகியுள்ளன.

மொத்த டெங்கு வழக்குகளில், 50 சதவீதத்திற்கும் அதிகமான வழக்குகள் மேற்கு மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளன.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவுவதைக் கட்டுப்படுத்த ஒரு சிறப்பு பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எல்.ஏ.கலு ஆராட்சி (Dr. L.A. Kaluarachchi) தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டினர் இல்லை

இதில் எண்ணூறுக்கும் மேற்பட்ட நடமாடும் கண்காணிப்பாளர்களும் அடங்குகின்றனர்.

கபே அமைப்பின் நிர்வாக இயக்குநர் மனாஸ் மக்கீன், 1,250 கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்துவதாகக் கூறினார்.

ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை 200 ஆகும். இதற்கிடையில், ஐம்பது நடமாடும் கண்காணிப்பு வாகனங்களும் பணியில் அமர்த்தப்படும்.

இந்தத் தேர்தலில் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் யாரும் ஈடுபட மாட்டார்கள் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.



# 339க்கு இன்று 'மை'

13,759 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆகக் கூடுதலாக 394,533 பேர், கொழும்பு மாநகர சபைக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். ஹப்புத்தளை நகர சபைக்கு 3051 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் இது ஆகக் குறைந்த வாக்காளர்களின் எண்ணிக்கையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு வருடங்கள் ஆட்சியை அதிகாரத்தைக் கொண்டிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இறுதியாக 2018 ஆம் ஆண்டு நடைபெற்றது. 2022 ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டிய தேர்தல் பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி ஒத்திவைக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டும் இரண்டாவது தடவையாக ஒத்திவைக்கப்பட்டன.

இதன் பிரகாரம் 2017.10.12 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பிரதேச சபைகள் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் கலப்பு விகிதாசார முறையின் கீழே இத்தேர்தல் நடைபெறுகின்றது.

வட்டார மட்டத்தில் 60 சதவீதமும், விகிதாசார அடிப்படையில் 40 சதவீத உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். 4750 ஒருமை உறுப்பினர் வட்டாரம் உள்ளது. அதிலிருந்து 4750 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இரண்டு உறுப்பினர் கொண்ட பன்மை வட்டாரம் 165 உள்ளது. அதிலிருந்து 330 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, மூன்று உறுப்பினர் கொண்ட பன்மை வட்டாரம் 04 உள்ளன. அதிலிருந்து 12 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மொத்தமாக வட்டாரங்களின் எண்ணிக்கை 4919 ஆகும், அவற்றுக்காக 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

341 உள்ளூராட்சி மன்றங்களில், 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு, இடம்பெறவுள்ள நிலையில், கல்முனை மாநகர சபைத்தொடர்பில், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, நிலுவையில் உள்ளமையால் அந்த சபைக்கான தேர்தல் நடைபெறாது.

அத்துடன், எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல், 26.10.2024 அன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆகையால், அந்த பிரதேச சபைக்கான தேர்தல், இன்னும் 4 வருடங்களின் பின்னரே நடத்தப்படவேண்டும்.

ஒரு வட்டாரத்திற்கு ஒரு வாக்களிப்பு நிலையம் அமைந்திருக்குமிடத்து, அதே வாக்களிப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் நடாத்தப்படும். ஒரு வட்டாரத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் அமைந்திருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கபடுகின்ற ஒரு வாக்களிப்பு நிலையத்திலோ, அல்லது வாக்களிப்பு நிலையங்களிலோ வாக்குகள் எண்ணப்படும்.

ஆகையால், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பெறுபேறுகளை, கூடிய விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# வடக்கு தங்கம்: விசாரிக்க உத்தரவு

குற்றப் புலனாய்வுத் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், இந்த உத்தரவுகள் இலங்கை இராணுவம், இரத்தினக் கற்கள் மற்றும் நகைகள் ஆணையம், குற்றப் புலனாய்வுத் துறை, குற்ற அறிக்கைகள் பிரிவு மற்றும் இலங்கை வங்கிக்குப் பிறப்பிக்கப்பட்டன, மேலும் தொடர்புடைய விசாரணைகளுக்குப் பொறுப்பான அனைத்து அரசு அதிகாரிகளின் பதிவுகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டன.

தங்கப் பொருட்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளையும் நடத்திய பின்னர், அனைத்து தங்கப் பொருட்களையும் இலங்கை மத்திய வங்கியின் பெட்டகங்களில் சேமித்து வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# இராஜதந்திரக் குழுவினர் சஜித்தை சந்தித்தனர்

ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டாச்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி மைக்கேல் டோடினி உள்ளிட்டவர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இங்கு, இரு தரப்பினரும் நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தினர். மேலும், GSP+ சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44% பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் காவிந்த ஜயவர்தன, எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம, பேராசிரியர் கெணடி குணவர்தன, பேராசிரியர் திருமதி சந்திமா விஜேகுணவர்தன, கலாநிதி மஹிம் மெண்டிஸ், கலாநிதி அதுலசிறி சமரகோன், கலாநிதி நதீஷா டி சில்வா, சுரங்க ரணசிங்க, குசும் விஜேதிலக மற்றும் திலும் அழகியவன்ன ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதிக்கு அவதூறு: துசிதவுக்கு சிக்கல்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் பெயரைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட மேற்படி கருத்துக்கள், ஜனாதிபதியின் நற்பெயருக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், துசித ஹல்லொலுவ மற்றும் அந்தக் கருத்துக்களை சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப நடவடிக்கை எடுத்த சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் தொடர்பில் துரித விசாரணை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இந்த முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக அவரின் சட்டத்தரணி அகலங்க உக்வத்தேவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவும் இதில் இணைந்து கொண்டார்.

# "இலங்கையில் முதலீடு செய்ய வாருங்கள்"

இலங்கையின் மூலோபாய புவியியல் இருப்பிடம், முற்போக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் குறிப்பாக சுற்றுலாத்துறை, ஆதன வர்த்தகம் ஆகிய அதிக திறன் கொண்ட துறைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

டெக்னொகொம் கோர்ப்பரேஷன் (Technocom Corporation) என்று முன்னர் அழைக்கப்பட்ட வின்குருப் (Vin Group) கூட்டு பங்கு நிறுவனம், 1993இல் உக்ரைனில் நிறுவப்பட்டது. தற்போது, வின்குருப் (Vingroup) பெயர் வியட்நாமில் மிகப் பாரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க தனியார் நிறுவனங்களில் ஒன்றாகும்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்,வின்குருப் (Vingroup) குழுமத்தின் உப தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வியட் குவாங் (Nguyen Viet Quang) இரு நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# தெருநாய் இறைச்சி விற்பதாக சந்தேகம்

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், எலஹெர வீதியிலும் தெருநாய்களைப் பிடிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல், விலங்குகள் இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றதா? என்ற சந்தேகம் உள்ளூர் வாசிகளிடையே கடுமையான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமான செல்லப்பிராணி நாய்கள், அவற்றின் உரிமையாளர்கள் இடம்பெயர்ந்த பிறகு, வழிதவறிச் சென்றுள்ளதாக சமூகப் பணியாளர் மற்றும் அம்பன விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதியான வை.எம்.எஸ். பண்டார (56) தெரிவித்தார்.

இந்த தெருநாய்கள் அடையாளம் தெரியாத குழுக்களால் சமீபத்தில், முறையாகப் பிடிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன, இது சட்டவிரோத இறைச்சி வர்த்தகம் குறித்த அச்சத்தைத் தூண்டியுள்ளது, இருப்பினும் இதுவரை எந்த உறுதியான ஆதாரமும் இல்லை.

> **அம்பான விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரப்பூர்வமாகத் தகவல் அளித்து, இந்த விடயத்தில் தலையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிப்படுத்தினார்**

நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, மீன்பிடி வலைகள் மற்றும் தடிகளுடன் ஆயுதம் ஏந்திய பலர் மொரகஹகந்த வீதியில் தெருநாய்களை சனிக்கிழமை மாலை (03), பிடிப்பதைக் காண முடிந்தது. கடந்த காலங்களில் இதேபோன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன, குறிப்பாக நாவுல காவல் பகுதியில், நாய் இறைச்சி விற்பனை நடந்ததாகக் கூறப்படுகிறது, இது மீண்டும் நிகழும் என்ற அச்சத்தைத் தூண்டியது என்று பண்டார மேலும் கூறினார்.

அருகிலுள்ள வனப்பகுதிகளில் காட்டு விலங்குகளை கட்டுப்படுத்தாமல் வேட்டையாடுவது தொடர்பான தொடர்ச்சியான பிரச்சினையையும், நாய் இறைச்சி வேட்டை இறைச்சியுடன் கலந்து சட்டவிரோதமாக விற்கப்படலாம் என்ற சந்தேகத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

அப்பகுதியில் சுற்றித் திரியும் நூற்றுக்கணக்கான தெருநாய்கள், முறையற்ற முறையில் அகற்றப்படும் குப்பைகளில் கிடக்கும் உணவுகளை உண்பதை கண்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். இந்த விலங்குகளை அடையாளம் தெரியாத நபர்கள் பிடித்தது தொடர்பான பல சம்பவங்கள் சமீபத்திய வாரங்களில் பதிவாகியுள்ளன.

அம்பான விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரப்பூர்வமாகத் தகவல் அளித்து, இந்த விடயத்தில் தலையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிப்படுத்தினார்.

# வங்கிகள் இன்று 11.00 மணி வரை மட்டுமே திறந்திருக்கும்




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு நாளான, செவ்வாய்க்கிழமை (06) அனைத்து வங்கிகளும் காலை 11.00 மணி வரை மட்டுமே திறந்திருக்கும் என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து வங்கிகளும் காலை 8.30 மணிக்குத் திறக்கப்படும். இரண்டரை மணி நேரம் திறந்திருக்கும் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# வெப்ப குறித்து எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளை பாதிக்கும் கடுமையான வெப்பத்திற்கு ஆளாகாமல் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

சில பகுதிகளில் வெப்பநிலை இயல்பை விட அதிகமாக உயரும் என்றும், காலை 10:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை கடுமையான வெப்பத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்றும் வடமத்திய மாகாணத்தின் மூத்த மருத்துவ அதிகாரி டாக்டர் ஹேமா வீரக்கோன் தெரிவித்தார்.

வெப்ப அலையால் ஏற்படக்கூடிய உடல்நல அபாயங்களைத் தடுக்க, வாக்களிக்க வரிசையில் நிற்கும்போது தலைக்கவசம் அணியவும், குடிநீர் குடிப்பதன் மூலம் நீரேற்றத்துடன் இருக்கவும் டாக்டர் வீரக்கோன் வாக்காளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த வெப்ப அலையின் தீவிரம் ஒருவரின் உடல்நிலையைப் பொறுத்து மாறுபடும். சில சந்தர்ப்பங்களில், இது ஆபத்தானது என்பதை அவர் மேலும் எச்சரித்தார்.

# “என் மகள் என்னிடம் அழுதாள்”

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள தனது முன்னாள் பாடசாலையில் நடந்த பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தில் தங்கள் பிள்ளை ஓரங்கட்டப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதால் இந்த முடிவுக்கு தள்ளப்பட்டதாக அவரது பெற்றோர் தெரிவித்ததன் மூலம், சமீபத்தில் கொட்டாஞ்சேனையில் தற்கொலை செய்து கொண்ட பாடசாலை மாணவி தொடர்பான புதிய தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

விசேட ஊடக சந்திப்பின் போது பேசிய மாணவியின் தாய், இந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மகள், தனது முன்னாள் பாடசாலையில் ஒரு ஆண் ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறினார்.

மேலும், “என் மகள் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சொல்கிறாள் என்று தகவல் கிடைத்ததும், நான் அவளை ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன், அவர் அவள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதை உறுதிப்படுத்தினார். பின்னர் வைத்தியர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார், அதன் பிறகு சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.



அவர்கள் எங்களிடமிருந்து ஓர் அறிக்கையைப் பதிவு செய்தனர். ஆனால், எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் அதுதான், ஏனென்றால், வேறு எந்த தகவலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. என் பிள்ளையை பாதுகாப்பதில் மட்டும் நான் கவனம் செலுத்தியதால் நான் அதைப் பற்றிப் பார்க்கவில்லை. மகளை, கொட்டாஞ்சேனையில் உள்ள வேறொரு பாடசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுத்ததாகவும், அங்கு ஆசிரியர்கள் அவளை நன்றாகக் கவனித்துக் கொண்டதாகவும் அந்தத் தாய் தெரிவித்தார்.

இருப்பினும், சமீபத்தில் ஒரு தனியார் வகுப்பில் நடந்த ஒரு சம்பவம், அந்த நிறுவனத்தில் ஒரு நபர் மற்ற மாணவர்கள் முன்னிலையில் தன்னை வெளிப்படையாக அவமானப்படுத்தியது, சம்பவம் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தியது, அவளை மன ரீதியாகப் பாதித்ததாக தாயார் கூறினார்.


என் மகள் எங்கும் செல்ல முடியாத சூழ்நிலையில் தள்ளப்பட்டார். இந்த சம்பவம் குறித்து அனைவரும் அவளிடம் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தனர். அவளை மோசமான முறையில் சித்திரித்து தகவல் பரப்பப்பட்டது. தனியார் கல்வி நிறுவனத்தில் நடந்த சம்பவத்திற்குப் பிறகுதான் இந்த விவரங்கள் வெளிவந்தன. தவறான தகவல்களைக் கூறி நிறுவன அதிகாரி தன்னை அவமானப்படுத்தியதாக என் மகள் என்னிடம் அழுதாள். எந்தத் தவறும் செய்யாதபோது ஏன் தண்டிக்கப்படுகிறேன் என்று கேள்வி எழுப்பினார்.

ஊடக சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (CTU) பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இந்த விடயத்தில் தலையிடத் தவறியதற்காக கல்வி அமைச்சைக் கண்டித்தார்.

ஒரு சம்பவம் நடந்தால், கல்வி அமைச்சு தலையிட்டு விசாரணை செய்வது கட்டாயமாகும், ஆனால் இந்த சந்தர்ப்பத்தில், அமைச்சு அவ்வாறு செய்யத் தவறிவிட்டது என்றும் கூறினார்.

கிராண்ட்பாஸ் கொலை:

## பெண் உடலின் மேல் பகுதி மீட்பு



கணவரின் கொடூரமான கத்தி குத்துக்குள்ளாகி, மருமகனால் உடலை இரண்டாக வெட்டி மூன்று உரப் பைகளில் கட்டி கிராண்ட்பாஸ் குப்பை மேட்டில் வீசப்பட்ட பெண்ணின் உடலின் மேல் பகுதி 8 நாட்களுக்குப் பின்னர். கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ், ஸ்டேட்புர பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தாயான 65 வயதுடைய ஏ.எச்.கே.விமலாவதி என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கொழும்பு துறைமுக தெற்கு முனையத்தில் வைத்து உடலின் மேல் பகுதி அடங்கிய உரப் பை நீரில் மிதந்து கொண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படை அதிகாரிகள் கொழும்பு துறைமுக பொலிஸாருக்கு அளித்த அறிவிப்பைத் தொடர்ந்து, துறைமுக பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்கிசையில் துப்பாக்கிச் சூடு:

## இளைஞன் உயிரிழப்பு

காலி வீதிக்கு அருகில், கல்கிசை கடற்கரை வீதியில் திங்கட்கிழமை(05) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை, கல்கிசை நகராட்சி மன்றத்தின் திடக்கழிவு பிரிவில் பணியாற்றும், தெஹிவளை, ஓபன் பிளேஸ் பிரதேசத்தைச் சேர்ந்த விஷ்வ என்பவரே வீதி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த அவர் களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## சிவனடியில் பெண் உயிர்மாய்ப்பு

சிவனொளிபாத மலைக்குச் சென்ற பெண் ஒருவர் பாலத்தில் இருந்து பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை இடம்பெற்றுள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில், அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 45 வயது உடைய எஸ். என்.பி. குமாரி ரத்து என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மஸ்கெலியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நல்லத்தண்ணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

யாழ். பருத்தித்துறை, மூர்க்கம் கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை கரையொதுங்கியுள்ளது.

தும்பளை கிழக்கு, சக்தி கோயிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான தர்சன் சத்தியா (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் கணவன் வெளிநாட்டில் உள்ள நிலையில் மேற்படி பெண்ணும் மகனும் தும்பளையில் வசித்து வந்துள்ளனர்.

கடற்கரையில் சடலமொன்று கிடப்பதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## இடையூறு விளைவித்த பயணிக்கு விளக்கமறியல்




■ டி.கே.ஜி.கபில

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த பயணி ஒருவரை வெள்ளிக்கிழமை (09) வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாத்தறை, துடாவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குறித்த பயணி, ஞாயிற்றுக்கிழமை (04) காலை ஃப்ளை துபாய் விமானம் FZ-579 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்தார்.

அவர் தனது பயணப் பையில் சட்டவிரோதமாக வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளையும், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான விஸ்கி பாட்டில்களையும் மறைத்து வைத்திருந்துள்ளார்.

சுங்க அதிகாரிகள் தனது கடமைகளைத் தொடங்கிய போது, கைப்பற்றப்பட்ட பொருட்களை தரையில் வீசி எறிந்து சுங்க அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இது குறித்து சுங்க அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, பயணி கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் பிரிவு 344 இன் கீழ் கடமையை நிறைவேற்றுவதற்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் அவர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், இதன்போது மேலும் பயணியை அடுத்த வெள்ளிக்கிழமை (09) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## A9 வீதியில் விபத்து; ஒருவர் பலி



அனுராதபுரம் - யாழ்ப்பாணம் A9 வீதியில் ரம்பேவ கங்காராமய விகாரைக்கு அருகில் தனியார் பேருந்தொன்று, முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மிஹிந்தலை வீதி, ரம்பேவ பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய இளங்கசிறி விதானலகே நிமல் சுபசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் ரம்பேவ நகரத்திலிருந்து மதவாச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, பின்னால் இருந்து வேகமாக வந்த தனியார் பேருந்து மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மீது மோதி, பிரதான வீதியில் வலதுபுறமாக வந்த முச்சக்கர வண்டியிலும் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்தில் காயமடைந்த இகிரிகொல்லாவ, வஹமல்கொல்லாவைச் சேர்ந்த 54 வயதுடைய முச்சக்கர வண்டி சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்..

சம்பவத்துடன் தொடர்புடைய மடாடுகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பேருந்து ஓட்டுநர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

















## உலக கை சுகாதார தினம்

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

மே மாதம் 05ஆம் திகதி உலக கை சுகாதார தினமாகும். இதனையொட்டி கல்முனை, வடக்கு ஆதார வைத்தியசாலை ஏற்பாடு செய்த சித்திரக் கண்காட்சி மற்றும் கை கழுவும் முறை குறித்த விழிப்புணர்வு நிகழ்வு திங்கட்கிழமை ( 05) அன்று கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் வைத்தியசாலை திறந்த வெளியில் இடம்பெற்றது.

இதன்போது ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளில் ஒன்றான கை சுகாதாரம் தொடர்பில் வைத்திய பணிப்பாளரினால் தெளிவு படுத்தப்பட்டதுடன், கை கழுவும் செயல் முறை நேரடியாக செய்து காட்டப்பட்டுத் தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை கை சுகாதாரம் தொடர்பாக, வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் வரையப்பட்ட விழிப்புணர்வு சித்திர ஆக்கங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன. இந்த சித்திர கண்காட்சியில் வரையப்பட்டிருந்த ஆக்கங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டதுடன், சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் வைத்தியர் இங்கு குறிப்பிட்டார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டொக்டர் தாஹிறா சபியுத்தீன், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,நிருவாக உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நான்கு வருடங்களை தீர்மானிக்கும் ஒரேயொரு புள்ளடி (X)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசாரம் நிறைவடைந்து, மே.6 ஆம் திகதியான இன்று (06) காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு நடைபெறவிருக்கின்றது. அதற்கான சகல ஏற்பாடுகளையும், தேர்தல்கள் திணைக்களம் நிறைவு செய்துள்ளது.

இந்தத் தேர்தலில், 17,256,338 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 341 உள்ளூராட்சி மன்றங்களில் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பே இன்று நடைபெறுகின்றது. அதில், 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகள் அடங்குகின்றன.

நான்கு வருடங்கள் ஆட்சியை அதிகாரத்தைக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இறுதியாக 2018ஆம் ஆண்டு நடைபெற்றது. 2022ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டிய தேர்தல் பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி ஒத்திவைக்கப்பட்டன. 2023ஆம் ஆண்டும் இரண்டாவது தடவையாக ஒத்திவைக்கப்பட்டன.

இந்த தேர்தலில் உங்களுக்கு நன்கு தெரிந்தவர்களே போட்டியிடுகின்றன. தேர்தல் பரப்புரைகளைப் பார்த்தோமெனில், தேசிய பிரச்சினையை மையமாக வைத்தே முன்னெடுக்கப்பட்டன. எனினும், இது உங்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட தேர்தலாகும். ஆகையால், யார்? வெற்றி பெற்றால், ஊருக்கும் கிராமத்துக்கும் உங்களுடைய பிரதேசத்துக்கும் நன்மை பயக்கும் என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்றாலே, வளங்களைக் கொள்ளையடிப்பவர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள், கொலை, கொள்ளை உள்ளிட்ட பல பயங்கர குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களே போட்டியிட்டனர். அந்த காலம் மலையேறி விட்டது என்று கூறமுடியாது.

ஏனெனில், இந்தத் தேர்தலில் போட்டியிடும் பலரும் மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள், பிரசார நடவடிக்கையின் போது, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சிறுமியை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றுமொரு சிறுமியை வன்புணர்ந்து குற்றச்சாட்டில் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது பேசும் பொருளாக இருக்கும், கொழும்பில் பிரபல தமிழ் பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்விப்பயின்ற மாணவியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கணித ஆசிரியரும், இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில், பல்வேறான குற்றச்சாட்டுகளின் கீழ், மார்ச் 3ஆம் திகதி முதல், மே. 4 ஆம் திகதிக்கு இடையில் 54 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் ஆதரவாளர்கள் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆகையால், இன்னும் நான்கு வருடங்களில் உங்களுடைய பிரதேசங்களில் அபிவிருத்தி வேண்டுமா? அல்லது ஊழல்,மோசடி மற்றும் மேலே குறிப்பிட்ட குற்றங்கள் இடம்பெறவேண்டும் என்பது நீங்கள் இடும் ஒரேயொரு புள்ளடியே (X) தீர்மானிக்கும் என்பதை நினைவில் கொள்க,

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## ‘புள்ளடி’ இடுவோரின் பொறுப்பும்
# தேர்தலுக்கு பிறகான சகவாழ்வும்

மொஹமட் பாதுஷா

இன்று வாக்களிப்பு தினம். அரசியல் கட்சிகளுக்கு மட்டுமன்றி, மக்களுக்கும் இன்னுமொரு வரலாற்று முக்கியத்துவமிக்க நாளாகும். எனவே, சரியான கட்சிக்கு, வேட்பாளருக்கு வாக்களிப்பதுடன், தேர்தல் நாளிலும் அதன் பின்னரும் ஒவ்வொரு பிரதேசத்திலும் சகஜ நிலையையும் அமைதியையும் உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு எல்லோருக்கும் உள்ளது.

“உள்ளூராட்சி தேர்தல் தானே”, “ஒரு புள்ளடிதானே” என்று சர்வசாதாரணமாக கருதாமல், அந்த புள்ளடியின் பெறுமதி, அதன் நீண்டகால விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். பொருத்தமான வேட்பாளருக்கு, சரியாக வாக்களிப்பதுடன், யார் வென்றாலும் யார் தோற்றாலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைதியை பேணுவதும் மக்களின் பொறுப்பு என்பதை மறந்து விடக் கூடாது.

உலகில் இன்னும் எங்கோ ஒரு மூலையில் மக்கள் வாக்குரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இலங்கையிலும் வாக்குரிமைக்குப் பின்னாலும் பல போராட்டங் கதைகள் உள்ளன. ஆனால், நமது தலைமுறைக்கு அது தானாகவே கிடைத்து விட்ட காரணத்தால், வாக்குரிமையின் தாற்பரியம் உணராதவர்களாக நாம் நடந்து கொள்ளக் கூடாது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அளிக்கப்படாத வாக்குகளின் எண்ணிக்கை 59 இலட்சத்திற்கும் அதிகமாகும். இந்த வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிவுகளின் கட்டமைப்பு கூட மாறியிருக்கலாம்.

அதேபோல், அளிக்கப்பட்ட வாக்குகளில் 667,240 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இந்த வாக்குகள் செல்லுபடியானவையாக இருந்திருந்தால் சில மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் வேறு மாதிரி அமைந்திருக்கலாம்.

எனவே, ‘இது சிறிய தேர்தல்தானே’ என்று நினைத்து வாக்களிக்காமல் விட வேண்டாம். அரசியல் பிரதிநிதிகளைப் புடம் போடுவதற்கான ஆரம்பப் பள்ளிக்கூடமாக உள்ளூராட்சி சபைகளே இருக்கின்றது.

ஆகவே, இன்றைய தினம் கட்டாயமாக வாக்களியுங்கள். இயலாமையில் உள்ள முதியவர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள் வாக்களிப்பது சிரமமானதுதான். நடக்க முடியாதவர்கள் சென்று வாக்களிக்கக் கூடிய வசதி அநேக வாக்களிப்பு நிலையங்களில் செய்யப்பட்டிருப்பதும் இல்லை.

மிக முக்கியமாக, ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கணிசமான சிங்கள வாக்காளர்கள் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வந்தது போல, பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள நமது சிறுபான்மை இளைஞர்கள், அவர்களது குடும்பங்கள் விடுமுறையில் நாட்டுக்கு வருவது கிடையாது.

இலட்சக்கணக்கான இலங்கை வாக்காளர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். வேறு பல நாடுகள் மேற்கொண்டுள்ளதைப் போல, இவர்கள் அங்கிருக்கும் தூதரகங்களிலோ வேறு மையங்களிலோ வாக்களிப்பதற்கான ஏற்பாட்டை இலங்கையில் ஆட்சி செய்த எந்த அரசாங்கமும் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை. இன்னும் பல இலட்சக்கணக்கான இலங்கையர் வெளிநாடுகளில் புகலிடம் கோரிக் கொண்டு இருக்கின்றனர். அல்லது குடியுரிமை பெற்றிருக்கின்றனர். ஒரு பிரதேசத்தில் பிறந்து வேறு பிரதேசத்தில் திருமணம் முடித்த அல்லது வாழ்கின்ற வாக்காளர்களின் பெயர்களையே பிறந்த பிரதேசத்திலுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கி விடுகின்ற நடைமுறை காணப்படுகின்றது.

ஆனால், வெளிநாடுகளில் குடியுரிமை பெற்ற கணிசமானோரின் பெயர்கள் பல்வேறு காரணங்களுக்காக வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகின்றது.

இதற்கு மேலதிகமாக, மத்திய கிழக்கில் இருபது வருடங்களாகத் தொழில்நிமித்தம் தங்கியுள்ள, எந்தத் தேர்தலும் வாக்களிக்காத ஆட்களும் உள்ளனர். இதுவெல்லாம் நமது நாட்டின் வாக்களிப்பு வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

எது எவ்வாறிருப்பினும், உடல் ரீதியாக இயலுமான அனைவரும் வாக்களிப்பது தொடர்பான பொறுப்பை இன்றைய தினம் மிகச் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

நமக்கு, நமது சமூகத்திற்கு, குறிப்பிட்ட பிரதேசத்திற்கு உண்மையிலேயே கடந்த காலங்களில் நல்ல பல சேவைகளைச் செய்த அல்லது எதிர்காலத்தில் செய்யும் என நம்பக்கூடிய கட்சிக்கு வேட்பாளருக்கு சரியான முறையில் வாக்களிக்க வேண்டும்.

வாக்களிப்பு நிலையத்திற்கு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் வாக்காளர் அட்டையுடனும் செல்ல வேண்டும்.

தேர்தல்கள் திணைக்களத்தால் குறிப்பிடப்பட்ட ஆள் அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

அதைவிடுத்து, அலுவலக அடையாள அட்டையையோ அல்லது தே.அ.அட்டைக்கு விண்ணப்பித்த பிரதியையோ கொண்டு வர வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தங்களுக்கு அங்குத் தரப்படும் வாக்குச் சீட்டில் மேலிருந்து கீழாகக் கட்சிகளின் பெயர்களும், சின்னங்களும் இருக்கும். அதற்கு எதிரே வாக்களிப்பதற்கான இடம் (கூடு) ஒன்றும் தரப்பட்டிருக்கும் அதில் புள்ளடி (X) இட வேண்டும்.

இந்த வாக்குச் சீட்டில் உங்களது வட்டாரத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர் இருக்காது. அவர்களுக்கு விரும்பு இலக்கங்களும் இல்லை என்பதை நினைவிற் கொள்ளவும்.

எனவே, நீங்கள் ஒரு கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட்டால் மட்டும் போதுமானது. அது அந்தக் கட்சியில் உங்களது வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருக்கு புள்ளடியிட்டதாகக் கருதப்படும். இந்த விபரத்தை உங்கள் பிரதேசத்தில் உள்ள முதியவர்களுக்கும் பாமர மக்களுக்கும் சொல்லிக் கொடுங்கள்.

தேர்தல் இன்று முடிவடைந்து விடும். நாளைய தினத்திற்குள் எல்லாக் ‘கூத்துக்களும்’ முடிவுக்கு வந்து விடும். அதன் பிறகு பொதுமக்கள் சகஜமான வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும். வழக்கமான வேலைகளைத் தொடங்க வேண்டியிருக்கும்.

எனவே, வாக்களிப்பு தினமான இன்றும், அடுத்து வரும் தினங்களிலும் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வது எல்லோரதும் பொறுப்பாகும்.

வாக்குகளை எண்ணும் பணிகள் அந்தந்த வட்டாரங்களிலேயே இடம்பெறுகின்றன. நாளை விடிவதற்கு இடையில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் பெறுபேறுகள் வெளியாகி விடும். ஒவ்வொரு சபையின் இறுதி முடிவையும் மாவட்ட செயலகங்கள் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவித்த பிறகு உத்தியோகப்பூர்வமாக உள்ளூராட்சி சபைகளின் முடிவுகள், ஆசன ஒதுக்கீடு வெளியாகும்.

முடிவுகள் விரைவாக வெளியாகலாம் என்றாலும், ஒவ்வொரு ஊரிலும் பல வாக்கு எண்ணும் நிலையங்கள் காணப்படுவதால் போலியான முடிவுகள், கட்டுக்கதைகள் வெளியாவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. இது முரண்பாடுகளுக்கு இட்டுச் செல்வதைத் தடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் அரசியலால் நாம் எவ்வளவு பெற்றோம் என்பதை விட, அரசியல் சண்டைகளால் எதனையெல்லாம் இழந்தோம் என்பதை இத்தருணத்தில் நினைவிற் கொண்டு செயற்படுவது அனைவரதும் பொறுப்பாகும்.

ஒவ்வொருவருக்கும் தமக்கு விரும்பிய கட்சியை, வேட்பாளரை ஆதரிக்கும் உரிமை உள்ளது. ஆனால், அதற்காக தமக்கிடையே சண்டையிடுவது முட்டாள்தனம் ஆகும்.

கடந்த காலங்களில் தேர்தல் தொடர்பான வாக்குவாதங்களால் பல குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. பல மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. பலர் ஊனமுற்றிருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதிக்காக களத்தில் நின்று போராடியவர்கள் எந்த அரசியல்வாதியாலும் கவனிக்கப்படாமல் படுக்கையில் கிடக்கின்றார்கள்.

வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதி அல்லது தோல்வியுற்ற அரசியல்வாதி இந்த இழப்புக்களை ஒரு நாளும் பொறுப்பெடுத்ததும் இல்லை. இனிமேல் பொறுப்பெடுக்கப் போவதும் இல்லை. பாதிக்கப்பட்ட முன்னாள் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கேட்டால் அந்த உண்மையைச் சொல்வார்கள்.

ஆளும் கட்சியாக இருந்தாலும், முஸ்லிம் அல்லது தமிழ்க் கட்சியாக இருந்தாலும், இதுதான் அரசியல் யதார்த்தம் என்பதைத் இள இரத்தங்கள்’ விளங்கிக் கொள்ள வேண்டும். ஆக, எதனையும் அளவோடு செய்ய வேண்டும்.

மிக முக்கியமாக, சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்கின்ற பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்களும் தமிழர்களும் மிகவும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு அரசியல்வாதிக்காக நமது சகவாழ்வை எந்த தருணத்திலும் கெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

இன்று பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுபவர், நாளை மாகாண சபை உறுப்பினராக, எம்.பியாக மேலே போய்விடுவார். ஆனால் மக்களாகிய நீங்கள் நிம்மதியிழந்து தவிக்க வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டும்.

மிக முக்கியமாக மக்கள் தேர்தலையும் தாண்டிச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். யார் வென்றாலும், யார் தோற்றாலும், யார் ஆட்சியமைத்தாலும் அளவுக்கு அதிகமாக இலகுவாகக் கடந்து செல்ல வேண்டும். அளவுக்கு அதிகமாக கொண்டாடத் தேவையுமில்லை. அளவு தெரியாமல் யாரையும் வம்புக்கு இழுக்க வேண்டியதுமில்லை.

அதேநேரம், தேர்தல் கால அமைதி விடயத்தில் பொலிஸாருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் பாரிய பொறுப்பிருக்கின்றது. வழக்கமாக ஆளும் தரப்பிற்கு ஆதரவாகவே பெரும்பாலும் அரச இயந்திரம் செயற்படுவதுண்டு. அதுபோல இந்த ஆட்சியிலும் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் நடந்து கொள்ளாமல் இருப்பதையும், நடுநிலைத்தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டும்.



# வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# அழகிய சூழலை அழிக்கும் வியாபாரிகள்

ஒவ்வொரு வருடமும் நடைபெறும் வசந்த கால நிகழ்வுக்காக நுவரெலியா நகரத்தின் நடைபாதைகளில் தற்காலிக கடைகள் அமைத்தவர்கள் நுவரெலியாவின் அழகிய சூழலை அழிப்பதாக நுவரெலியா மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

2025 வசந்த கால நிகழ்வுகள் நுவரெலியா நகராட்சி மன்றத்தால் ஏப்ரல் 1 முதல் 21 வரை நடத்தப்பட்டது.

இதற்காக வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு தற்காலிக கடைகள் கட்டவும், வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நகராட்சி மன்றம் ஏப்ரல் 30, 2025 வரை அனுமதி அளித்திருந்தது.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு, நுவரெலியா, தர்மபால சுற்றுப் பகுதியிலிருந்து நுவரெலியா கோல்ஃப் மைதானம் வரை உள்ள நடைபாதையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகளை அகற்றப்பட்ட போதும் பொலித்தீன் உள்ளிட்ட திடக்கழிவுகளை விற்பனையாளர்கள், நுவரெலியா நடைபாதையிலேயே விட்டுச் சென்றுள்ளதை அவதானிக்க முடிந்தது . இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

- ரஞ்சித் ராஜபக்ஷ

# ஆட்டம்போட்ட அமலாபால்



நடிகை அமலாபால் தனியார் கல்லூரி மாணவ மாணவியுடன் சேர்ந்து செம ஆட்டம் போட்ட வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

தமிழ் மற்றும் மலையாள திரையுலகின் முன்னணி நடிகையாக இருந்த அமலாபால், திருமணத்திற்குப் பின்னர் நடிப்பை குறைத்துக் கொண்டார்.

அண்மையில்,குழந்தை பெற்ற அவர், எந்த புதிய படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை. தற்போது ஒரு மலையாளப் படத்தில் மட்டுமே நடித்து வருகிறார்.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக உள்ள அமலாபால் அடிக்கடி புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைபதிவிடுகிறார்.

இந்த நிலையில், அண்மையில் அவர் தனியார் கல்லூரியின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது மாணவர்கள் அவரை உற்சாகமாக வரவேற்றனர்.

நிகழ்ச்சி முடிவில் மாணவ மாணவியுடன் இணைந்து ஆட்டம் போட்ட அமலாபால், அவர்களுக்கு அறிவுரையும் கூறியுள்ளார். அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவிவருகிறது.

# நீச்சல் குளத்தில் தேனிலவு

## 'ஒரு குட்டி விடுமுறை'



பிக்பாஸ் போட்டியாளர்களான அமீர் மற்றும் பாவனிரெட்டி இருவரும் நீச்சல் குளத்தில் தேனிலவு கொண்டாடும் வீடியோவை சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ள நிலையில், அந்த வீடியோ வைரலாகி வருகிறது.

பிக்பாஸ் நிகழ்ச்சியின் போது காதலித்த அமீர் மற்றும் பாவனிரெட்டி, இருவரும் அண்மையில் திருமணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில், தற்போது அமீர் - பாவனி தேனிலவுக்குச் சென்றுள்ள நிலையில், அங்கு எடுத்த வீடியோவை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளனர்.

நீச்சல் குளத்தில் நெருக்கமாக இருப்பது, நீச்சல் குளத்திலேயே சாப்பாடு வரவழைத்து சாப்பிடுவது உள்ளிட்ட காட்சிகள் இந்த வீடியோவில் உள்ளன.

இந்த வீடியோவுக்கு தலைப்பான, "ஒரு குட்டி விடுமுறை! என்னுடைய நெருக்கமானவருடன் வந்திருக்கிறேன். இப்படி ஒரு இனிமையான பிரேக் கண்டிப்பாக இருவருக்கும் தேவைப்படுகிறது" என்று பாவனிரெட்டி, பதிவு செய்துள்ளார்.



# விவாகரத்தான நடிகருடன் மிருணாள் தாக்கூர் காதல்?

மராத்தி மற்றும் இந்தி படங்களில் நடித்துக்கொண்டிருந்த நடிகை மிருணாள் தாக்குர், துல்கர்சல்மான் நடித்த 'சீதாராமம்'என்ற படத்தின் மூலம் தெலுங்கு மற்றும் தெலுங்கு திரையுலகில் அறிமுகமானார்.

அதன் பிறகு பல தெலுங்கு படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் அவர் விரைவில் தமிழிலும் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் நடிகை மிருணாள்தாக்குர் , சுமந்த் என்ற நடிகருடன் காதலில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஏற்கெனவே 'சீதாராமம்' திரைப்படத்தில் நடிகர் சுமந்த் ஒரு வில்லன் கேரக்டரில் நடித்திருந்தார்.

அந்த படத்தின் படப்பிடிப்பின் போது தான் இருவருக்கும் நட்பு ஏற்பட்டு அந்த நட்பு தற்போது காதல் ஆக மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# பாரிஸில் நயன்தாரா



நடிகை நயன்தாரா பாரிஸில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்திற்கு சென்று, அது குறித்த புகைப்படங்களைத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

தமிழ் திரையுல 'கில்லேடி சூப்பர் ஸ்டார்' என்று அழைக்கப்படும் நயன்தாரா கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாயகி ஆக நடித்து வருகிறார்.

தற்போது, 'மண்ணாங்கட்டிசின்ஸ் 1960', 'டியர்ஸ்டூடண்ட்ஸ்', 'மூக்குத்தி அம்மன் 2', 'ராக்காயி', 'டாக்சிக்' உள் பட ஏழு படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போது பாரிஸில் உள்ள பழம்பெரும் தேவாலயத்திற்குச் சென்ற புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ளார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த தேவாலயத்தில் நயன்தாரா இருக்கும் புகைப்படங்களுக்கு ஏராளமான லைக்ஸ் மற்றும் கமெண்ட்ஸ் அளிக்கப்பட்டு வருகிறது.

# வாக்களிப்பு நிலையங்கள் தயார்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் தயாரிக்கும் பணிகள் திங்கட்கிழமை (5) காலை முதல் இடம்பெற்றன.

இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல், 13,759 வாக்குச் சாவடிகளில் செவ்வாய்க்கிழமை(06) காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு மையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டன

தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 49 கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 75,589 வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- தமிழ்மிரர் நிருபர்கள்


மட்டக்களப்பில்...




திருகோணமலையில்...




பதுளையில்...




கேகாலையில்...




வவுனியாவில்...





முல்லைத்தீவில்...




இரத்தினபுரியில்...




நுவரெலியாவில்...




மொனராகலையில்...




யாழ்ப்பாணத்தில்...




மன்னாரில்...




அம்பாறையில்...



பாகிஸ்தான்

பாகிஸ்தான் துறைமுகங்களில்

# இந்திய கப்பல்களுக்குத் தடை


பாகிஸ்தானில் இருந்து எந்த பொருளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இறக்குமதி செய்ய இந்திய மத்திய அரசு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

இந்தியக் கொடியுடன் எந்தவொரு கப்பல்களும் பாகிஸ்தான் செல்லவும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, பாகிஸ்தான் கப்பல்களும் இந்தியாவுக்கு வர அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக இது உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் இந்த நடவடிக்கைக்குப் பழிவாங்கும் விதமாகப் பாகிஸ்தான் துறைமுகங்களில் இந்தியக் கப்பல்களுக்குப் பாகிஸ்தான் தடை விதித்து இருக்கிறது.

இந்தியக் கொடிகளுடன் வரும் எந்த கப்பல்களையும் பாகிஸ்தான் துறைமுகங்களில் அனுமதிக்கக் கூடாது என்றும் பாகிஸ்தான் கொடி ஏந்திய கப்பல்கள் இந்தியத் துறை முகங்களுக்குச் செல்லக்கூடாது என பாகிஸ்தான் கடல்சார் விவகார அமைச்சகத்தின் துறைமுகங்கள் மற்றும் கப்பல் பிரிவு உத்தரவிட்டுள்ளதாக அங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருக்கிறது.

பொருளாதார நலன் மற்றும் தேசியப் பாதுகாப்பைப் பாதுகாக்கும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லிவர்பூலை வென்ற செல்சி


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற சம்பியனாகத் தெரிவாகியுள்ள லிவர்பூலுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாக என்ஸோ பெர்ணாண்டஸ், கோல் பல்மர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை வேர்ஜில் வான் டிஜிக் பெற்றிருந்தார்.

இதேவேளை, பிரென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

மாலைத்தீவு

## மாலைத்தீவு ஜனாதிபதியின் புதிய சாதனை



மாலைத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு (வயது 46), தொடர்ந்து 15 மணி நேரம் நிருபர்களுக்கு பேட்டி அளித்து புதிய சாதனை படைத்துள்ளார்.


முகமது முய்சு தனது பத்திரிகையாளர் சந்திப்பை, சனிக்கிழமை (3) காலை 10 மணிக்கு தொடங்கினார். தொடர்ந்து அவர் நள்ளிரவு வரை 14 மணி நேரம் 54 நிமிடம் பேட்டி அளித்து உலக சாதனை புரிந்துள்ளார்.

இதற்கு முன்பு உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி 14 மணி நேரம் நிருபர்களை சந்தித்து பேட்டி அளித்தது தான் சாதனையாக இருந்தது. இந்த சாதனையை மாலைத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு முறியடித்து உள்ளார்.

அமெரிக்கா

பிற நாட்டு திரைப்படங்களுக்கு

## 100 சதவீத வரி உயர்வு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் புதிய அறிவிப்பால் அமெரிக்காவில் திரையிடப்படும் இந்தியப் படங்களுக்கு டிக்கெட் கட்டணம் உயரும் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி ட்ரம்ப் தனக்கு சொந்தமான 'ட்ரூத்' சமூக வலைத்தளத்தில், அமெரிக்கத் திரைப்படத் துறை (ஹாலிவூட்) மிக வேகமாகப் பேரழிவிற்குள்ளாகி வருவதாகவும் மேலும், ஏனைய நாடுகள் அதற்கான முயற்சியை ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ளன.

அது அமெரிக்கத் தேசத்தின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளாகவும் சாடியுள்ளார்.

அனைத்துக்கும் மேலாக இந்தப் படங்கள் பிரச்சார பாணியில் உள்ளன. எங்களுக்கு வேண்டியதெல்லாம் மீண்டும் அமெரிக்காவில் திரைப்படங்கள் எடுக்க வேண்டும்.

இந்த புதிய கட்டண முறை திரைப்படத் துறையில் நிலவும் போட்டியைச் சமன் செய்வதையும், அமெரிக்கத் தேசத்தில் உள்ள ஸ்டுடியோக்கள் தங்கள் செயற்பாடுகளைத் தொடர ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அதில் பதிவிட்டுள்ளார்.

ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பால் அமெரிக்காவில் திரையிடப்படும் இந்தியப் படங்களுக்கு டிக்கெட் கட்டணம் உயரும் என்று கூறப்படுகிறது. மேலும் 100 சதவீத வரி விதிப்பால் டிக்கெட் கட்டணம், படப்பிடிப்பு, தொழில்நுட்ப பணிக்கான கட்டணம் உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.பி.எல்:

## லக்னோவை வீழ்த்திய பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), தரம்சாலாவில் ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: லக்னோ

பஞ்சாப்: 236/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பிரப்சிம்ரன் சிங் 91 (48), ஷ்ரேயாஸ் ஐயர் 45 (25), ஷஷாங்க் சிங் ஆ.இ 33 (15), ஜொஷ் இங்லிஸ் 30 (14), நெஹால் வதேரா 16 (09), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 15 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆகாஷ் சிங் 2/30 [4])

லக்னோ: 199/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஆயுஷ் படோனி 74 (40), அப்துல் சமட் ஆ.இ 45 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங் 3/16 [4], அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 2/33 [4], மார்கோ ஜன்சன் 1/31 [4])

போட்டியின் நாயகன்: பிரப்சிம்ரன் சிங்.

இதேவேளை, மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## ஐ.பி.எல்லில் 6 பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றவராக பராக்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), தொடர்ச்சியாக ஆறு பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றவராக ராஜஸ்தான் றோயல்ஸின் ரியாக் பராக் மாறியுள்ளார்.

கொல்கத்தா நைட் றைடர்ஸுக்கெதிரான ஞாயிற்றுக்கிழமை (04) போட்டியின்போதே இச்சாதனையை பராக் புரிந்துள்ளார்.

அந்தவகையில் ஐந்து பந்துகளில் தொடர்ச்சியாக ஆறு ஓட்டங்களைப் பெற்ற கிறிஸ் கெய்ல், கெரான் பொலார்ட், ரிங்கு சிங்கை பராக் தாண்டியுள்ளார்.

இப்போட்டியில், 95 (45) ஓட்டங்களை பராக் பெற்றிருந்தபோதும் ராஜஸ்தான் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் குழாமில் மெஹிடி இல்லை



ஐக்கிய அரபு அமீரகம், பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடர்களுக்கான பங்களாதேஷ் குழாமில் சகலதுறைவீரர் மெஹிடி ஹஸன் மிராஸ் இடம்பெறவில்லை.

குழாம்: லிட்டன் தாஸ் (அணித்தலைவர்), தன்ஸிட் ஹஸன், பார்வெஸ் ஹொஸைன், செளமியா சர்கார், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, தெளஹிட் ஹிரிடோய், ஷமிம் ஹொஸைன், ஜாகிர் அலி, ரிஷாட் ஹொஸைன், மஹெடி ஹஸன் (உப அணித்தலைவர்), தன்விர் இஸ்லாம், முஸ்தபிசூர் ரஹ்மான், ஹஸன் மஹ்மூட், தன்ஸிம் ஹஸன் சகிப், நஹிட் ரானா, ஷொரிஃபுல் இஸ்லாம்.

இந்தியா

பாக்லிஹார் அணையில் இருந்து

## பாக். செல்லும் தண்ணீர் நிறுத்தம்




பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை அடுத்து, சிந்து நதியில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் தண்ணீர் நிறுத்தப்படும் என இந்திய அரசு அறிவித்த நிலையில், செனாப் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாக்லிஹார் அணையில் இருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், செனாப் நதியின் வழித்தடம் நீரின்றி காய்ந்து காணப்படுகிறது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஜம்மு காஷ்மீர் மக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ஜீலம் நதியிலிருந்தும் நிறுத்தம்

இதேபோல, ஜீலம் நதியில் உள்ள கிஷன்கங்கா அணையில் இருந்தும் பாகிஸ்தானுக்குத் தண்ணீர் செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜமியத் உலமா-இ-ஹிந்த்-ன் தலைவர் அர்ஷத் மதானி, சிந்து நதி நீர் நிறுத்தத்துக்கு அதிருப்தி தெரிவித்துள்ளார். ஜமியத் உலமா-இ-ஹிந்த் தலைவர் அர்ஷத் மதானியின் கருத்துக்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது.



கேரளா

முதன்முறையாக

## சபரிமலைக்கு செல்லும் முதல் ஜனாதிபதி

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு இம்மாதம் சபரிமலை ஐயப்பன் கோவிலில் தரிசனம் செய்வதற்காக கேரளா மாநிலம் செல்லவுள்ளார்.

சபரிமலைக்கு இந்திய ஜனாதிபதி ஒருவர் வருவது இதுவே முதன் முறையாகும்.

இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கேரளா செல்லும் அவர், 18 மற்றும் 19ஆம் திகதிகளில் கோட்டயம் குமரகத்தில் தங்கி இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகையை ஒட்டி, சபரிமலை தேவசம் போர்டும், அம்மாநில பொலிஸாரும் முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இதன்படி சபரிமலையில் ஜனாதிபதி வரும் நாட்களில் கடுமையான பாதுகாப்பும், கட்டுப்பாடுகளும் அமுல்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

மேலும், மெய் நிகர் முன்பதிவு உள்ளிட்ட ஏற்பாடுகள் மாற்றம் செய்யப்படும் என்றும், வழக்கமான பக்தர்கள் அனுமதி ரத்து செய்யப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஜனாதிபதி வருகையை ஒட்டி, சபரிமலை கோவிலில் சீரமைப்பு பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

ஜேர்மனிய கால்பந்தாட்ட தொடர்:

## சம்பியனானது பயேர்ண் மியூனிச்



ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில் பயேர்ண் மியூனிச் சம்பியனானது.

ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற பிறைபேர்க்குடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் பயெர் லெவர்குசன் சமப்படுத்தியதைத் தொடர்ந்தே மியூனிச் சம்பியனானது.

புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 32 போட்டிகளில் முடிவில் 76 புள்ளிகளை மியூனிச் பெற்றுள்ள நிலையில், 68 புள்ளிகளை லெவர்குசன் பெற்றுள்ளது.

ஆக எஞ்சியிருக்கும் இரண்டு போட்டிகளிலும் மியூனிச் தோற்று, லெவர்குசன் வென்றாலும் 75 புள்ளிகளையே லெவர்குசன் பெற முடியுமென்ற நிலையிலேயே மியூனிச் சம்பியனாவதை உறுதி செய்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 06, மே 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.